தினமணி

# மஞ்சள் விலை வீழ்ச்சி : விவசாயிகள் கவலை

First Published : 28 May 2012 12:57:26 PM IST

கரூர், மே 27: கரூர் மாவட்டத்தில் நிகழாண்டில் மஞ்சள் விளைச்சல் அதிகரித்துள்ளது. ஆனால் போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி, சின்னதாராபுரம், நஞ்சை, புஞ்சைகாளிக்குறிச்சி, நொய்யல், வேலாயுதம்பாளையம், க. பரமத்தி வட்டாரத்தின் பல்வேறு பகுதிகளில் மஞ்சள் பயிரிடப்படுகிறது. நிகழாண்டில் 575 ஹெக்டேரில் 3300 மெட்ரிக் டன் மஞ்சள் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

நிகழாண்டில் விவசாயிகள் எதிர்பார்த்த சாகுபடியும் இருந்தது. இதைத் தொடர்ந்து தற்போது மஞ்சள் அறுவடை நடைபெறுகிறது. ஆனால், கடந்தாண்டைப் போல தற்போது மஞ்சளின் விலை இல்லை என்கின்றனர் விவசாயிகள்.

அமராவதி ஆற்றுப் பாசனத்தை வைத்துத்தான் மஞ்சள் சாகுபடி செய்வோம். ஆனால், ஆற்றில் எதிர்பார்த்த தண்ணீர் இல்லாததால், ஆற்றோரத்தில் ஆயில் என்ஜினை வைத்து மஞ்சள் பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சி, பயிரைக் காப்பாற்றி வந்தோம்.

ஆனால், தற்போது அறுவடைக்குப் பின்னர் மஞ்சளுக்கு கிடைக்கும் விலையைப் பார்க்கும்போது, நாங்கள் தொடர்ந்து மஞ்சள் பயிரிட முடியுமா என்ற அளவிற்கு இருக்கிறது. கடந்தாண்டு ஆண்டு கிலோ ரூ. 35 முதல் ரூ. 45 வரை விலைபோன மஞ்சள், நிகழாண்டு கிலோ ரூ. 3 முதல் ரூ. 5 வரையே போகிறது.

நிகழாண்டு இதன் உற்பத்தி அதிகமாக இருப்பது மகிழ்ச்சியளித்தாலும் மிகக் குறைந்த விலைக்கு விற்பதால், அறுவடைத் தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க முடியாத நிலை ஏற்படும். இது தொடர்ந்தால், எங்கள் பகுதிகளில் வருங்காலங்களில் மஞ்சள் சாகுபடியே இல்லாமல் போய்விடும் என்கின்றனர் க. பரமத்தி பகுதி விவசாயிகள்.

நெல் போன்ற பயிர்களுக்கு அரசு விலை நிர்ணயம் செய்யும்போது, மஞ்சள் சாகுபடி நடைபெறும் பகுதிகளில் அந்தப் பயிரைக் காக்கும் வகையில் அரசே விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மூலிகைகள் குறித்து விழிப்புணர்வு

First Published : 28 May 2012 01:09:53 PM IST

வேதாரண்யம், மே 27: மருத்துவ குணமுடைய மூலிகைகள் குறித்த விழிப்புணர்வும், அவற்றை பயன்படுத்தும் வழிமுறைகள் தொடர்பான புரிதலும், ஆரோக்யமான வாழ்வுக்கு வழிவகுக்கும் என மூலிகை பயிற்சியில் அறிவுறுத்தப்பட்டது.

நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த கோடியக்கரை கோடிமுத்து மாரியம்மன் கோவில் அரங்கில் மூலிகைகள் குறித்த விளக்கப் பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் பூனைக்காலி, குமுளை, ஆவாரை, சங்கு புஷ்பம், சர்க்கரைக் கொல்லி, சிவனார் வேம்பு, தண்ணீர்விட்டான் கிழங்கு உள்ளிட்ட 50-க்கும் மேலான மூலிகைகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

இயற்கை அளித்துள்ள மூலிகைகளின் மருத்துவ குணங்களை தெரிந்துகொண்டு, உரிய முறைகளை கையாண்டு மருந்தாக உள்கொண்டால் பலன் கிடைக்கும் என முகாமில் பங்கேற்று பேசியவர்கள் தெரிவித்தனர்.

முகாமுக்கு கோடியக்கரை மூலிகை ஆய்வு மையத் தலைவர் மருத்துவர் ஏ. செய்யது பாரக் தலைமை வகித்தார்.

இதில் வேதாரண்யம் வட்டாட்சியர் வே. புண்ணியகோடி, அரசுப் போக்குவரத்துக்கழக கிளை மேலாளர் சி. திருமறைநாதன், சித்த வைத்தியர்கள் வெங்கடாசலம், ஆர். வீராச்சாமி, ஆர்.வி. ராமமூர்த்தி, ஏ. அஞ்சப்பன், சோ. சகாதேவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பாரம்பரிய நெல் வகைகளை பாதுகாக்க வேண்டும்: கோ. நம்மாழ்வார் பேச்சு

First Published : 28 May 2012 01:08:38 PM IST

திருத்துறைப்பூண்டி, மே 27: பாரம்பரிய நெல் வகைகள் அழிந்துவிடாமல் பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார் தெரிவித்தார்.

திருவாரூர் மாவட்ட நபார்டு வங்கி, திருத்துறைப்பூண்டி பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஆதிரெங்கம் இயற்கை வேளாண் மையம், கிரேயட் அமைப்பு ஆகியவை சார்பில், ஆதிரெங்கம் இயற்கை வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் மாநில அளவிலான கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது:

பூமி வெப்பமடைவதால், தட்பவெப்ப நிலையில் மாற்றம் ஏற்பட்டு, பயிர் விளைச்சல் பாதிக்கப்படுகிறது. உலக மயமாக்கல், தாராள மயமாக்கல் போன்ற அரசின் கொள்கைகளால் மக்களின் வாழ்வாதாரம் சுருங்கிவிட்டது. நதிகள் அனைத்தும் மாசடைந்து வருகிறது.

விவசாயிகள் சுயசார்புடன் விவசாயத் தொழிலில் ஈடுபடும் வகையில், பாரம்பரிய நெல் விதைகளை தாங்களே சொந்தமாக தயார் செய்து பயிரிடுவதுடன், வெளிநாடுகளில் தடை செய்யப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளை உபயோகிக்கக் கூடாது.

மத்திய அரசு பன்னாட்டு நிறுவனங்களுக்கு சிவப்பு கம்பளம் விரிப்பதை இனியும் அனுமதிக்கக் கூடாது. அதற்கு எதிரான இரண்டாவது சுதந்திரப் போராட்டத்துக்கு விவசாயிகள் தயாராக வேண்டும் என்றார் நம்மாழ்வார்.

நிகழ்ச்சியில், இயற்கை வேளாண்மை விற்பனை கண்காட்சியை மாநில நெல் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் சி. பாலகிருஷ்ணன் தொடக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில், விவசாயிகள் 2000 பேருக்கு தலா 2 கிலோ பாரம்பரிய நெல்விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

இதில் நமது நெல்லைக்காப்போம் தேசிய நிர்வாகிகள் ஆர். ஸ்ரீதரன், எஸ். உஷா, கேரள வேளாண்மைத் துறை முன்னாள் அமைச்சர் முல்லக்கரா. ரெத்னாகரண், பரமுகல்யாணி வேளாண்மை மைய பேராசிரியர் வி.எஸ். விஜயலட்சுமி, சுற்றுப்புறச் சூழல் கோட்ட செயற்பொறியாளர் இளங்கோவன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கே. பாண்டியன், திருத்துறைப்பூண்டி பாரத ஸ்டேட் வங்கி மேலாளர் என். ரகுநாதன், கட்டிமேடு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாளர் கே. சந்திரன், நாகை மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழு முன்னாள் தலைவர் சிக்கல் அ. அம்பலவாணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை நமது நெல்லைக்காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் இரா. ஜெயராமன் செய்திருந்தார்.

செஸ் வரி விதிக்க வேண்டும்

நாடு முழுவதும் 2.5 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதற்கு மத்திய அரசே காரணம். இந்த நிலை மாறுவதற்கு, நாடு முழுவதும் உணவுப் பொருள்களுக்கு 2 சதவீதம் செஸ் வரி விதிக்க வேண்டும்.

அதில் வரும் தொகையைக் கொண்டு, விவசாயிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டியது மத்திய, மாநில அரசுகளின் கடமையாகும் என்றார் கேரள வேளாண்மைத் துறை முன்னாள் அமைச்சர் முல்லக்கரா. ரெத்னாகரண்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

# காபி உற்பத்தி 51 லட்சம் மூட்டைகளாக குறையும்

மே 29,2012,00:30



புதுடில்லி:வரும் 2012-13ம் சந்தைப்படுத்தும் பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்), நாட்டின் காபி உற்பத்தி, 51 லட்சம் மூட்டைகளாக (ஒரு மூட்டை-60 கிலோ) குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, முந்தைய பருவத்தில், மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை விட, 4 சதவீதம் குறைவாகும் என, அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது.காபி உற்பத்தி உயர்வதற்குரிய பருவச் சூழல் நன்கு இல்லாததுதான் இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.சர்வதேச அளவில், காபி உற்பத்தியில், இந்தியாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது.
இந்தியாவில், காபி பயிருக்கு பாரம்பரிய இடங்களாக திகழும் கர்நாடகா, தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில், 4 லட்சம் ஹெக்டேரில், காபி பயிரிடப்பட்டுள்ளது.

இதுதவிர ஆந்திரா, ஒடிசா போன்ற புதிய பகுதிகளிலும், இவை பயிரிடப்பட்டுள்ளது.நடப்பு 2011-12ம் சந்தைப்படுத்தும் பருவத்தில், காபி உற்பத்தி, 53 லட்சம் மூட்டைகளாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பருவ நிலையில் மாற்றம் இல்லாததால், இதன் உற்பத்தி, வரும் சந்தைப் பருவத்தில், 4 சதவீதம் குறைந்து, 51 லட்சம் மூட்டைகளாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கணக்கீட்டு காலத்தில், ரோபஸ்டா வகை காபி உற்பத்தி, 36 லட்சம் மூட்டையிலிருந்து, 34 லட்சம் மூட்டைகளாகவும், அரபிகா வகை காபி உற்பத்தி, 17.20 லட்சம் மூட்டையிலிருந்து, 16.60 லட்சம் மூட்டைகளாகவும் குறையும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.நாட்டின் மொத்த காபி உற்பத்தியில், பெரும்பகுதி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

உள்நாட்டு பயன்பாடு, 10 லட்சம் மூட்டைகள் என்றளவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கோதுமை கொள்முதல் 3.26 கோடி டன்னாக உயர்வு

மே 29,2012,00:29



புதுடில்லி:உற்பத்தி அதிகரித்ததை அடுத்து, நடப்பு சந்தை பருவத்தில் (ஏப்ரல்-ஜூன்), இதுவரையிலுமாக, நாட்டின் கோதுமை கொள்முதல், 3.26 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இது, கடந்த பருவத்தின் இதே காலத்தில், 2.48 கோடி டன்னாக இருந்தது என, இந்திய உணவு கழகம் தெரிவித்துள்ளது.மதிப்பீடு:உலகளவில், கோதுமை உற்பத்தியில், இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. நடப்பு 2011-12ம் பயிர் பருவத்தில் (ஜூலை-ஜூன்), நாட்டின் கோதுமை உற்பத்தி, 9 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு, இந்திய உணவு கழகம் மற்றும் மாநில அரசுகளின் முகமை அமைப்புகள் மூலம் விவசாயிகளிடமிருந்து உணவு தானியங்களை கொள்முதல் செய்து, பொது வினியோகத் திட்டத்தின் கீழ் வழங்கி வருகிறது. ஒரு குவிண்டால் கோதுமையை கொள்முதல் செய்வதற்காக, குறைந்தபட்ச ஆதரவு விலையாக, 1,285 ரூபாயை வழங்கி வருகிறது.நடப்பு பருவத்தில், கோதுமை உற்பத்தியில், குறிப்பிடத்தக்க பங்களிப்பை கொண்டுள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில், பருவம் தவறிய மழை பொழிவால், இதன் உற்பத்தி குறைந்துள்ளது. இந்நிலையிலும், ஒட்டுமொத்த அளவில், கோதுமை கொள்முதல் சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது.

நடப்பு பருவத்தில், பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் இருந்து முறையே, 1.28 கோடி டன் மற்றும் 86 லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மதிப்பீட்டு காலத்தில், மத்திய பிரதேசத்தில், 69 லட்சம் டன், உத்தரபிரேதசத்தில், 25 லட்சம் டன் என்றளவில் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கிடங்கு வசதி:கொள்முதல் செய்யும் உணவு தானியங்களை சேமித்து வைப்பதற்கு, மத்திய அரசிடம் போதுமான கிடங்கு வசதியில்லை. நடப்பு பருவத்தில், 6.28 கோடி டன் உணவு தானியங்களை சேமிக்க மட்டுமே கிடங்கு வசதிஉள்ளது.

ஆனால், உணவு தானியங்களின் கொள்முதல் 7.50 கோடி டன்னாக இருக்கும் என,

எதிர்பார்க்கப்படுகிறது.உணவு தானியங்கள் வீணாவதை தடுக்கும் வகையில், பிரதமரின் பொருளாதார ஆலோசனை குழுவின் தலைவர் சி.ரங்கராஜன் தலைமையிலான குழு, "புதிதாக கொள்முதல் செய்யும் உணவு தானியங்களை சேமித்து வைப்பதற்கு இடவசதி இல்லாததால், வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கு, 1 கோடி டன் கோதுமையும், பொது சந்தையில், 30 லட்சம் டன் கோதுமையும் வினியோகம் செய்யலாம்' என, பிரதமரிடம் அறிக்கை தாக்கல் செய்துள்ளது.மேலும், அரசு கிடங்குகளில் இருந்து, 20 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்யலாம் எனவும், இக்குழு பரிந்துரைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கோடை சாகுபடியில் இழப்பு தடுக்க எலி ஒழிப்பு முகாம்

பதிவு செய்த நாள் : மே 29,2012,03:28 IST

வேதாரண்யம்: நாகை மாவட்டத்தில் கோடை சாகுபடியில் எலியால் ஏற்படும் இழப்பை கட்டுப்படுத்த கடந்த 26ம் தேதி ஒருங்கிணைந்த எலி ஒழிப்பு முகாம் வேளாண்மைத்துறை சார்பில் நடந்தது. முன்னதாக, முகாமை கலெக்டர் முனுசாமி துவங்கி வைத்தார். இதில், இணை இயக்குனர் ராஜேந்திரன் மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர்.வேதாரண்யம் பஞ்சாயத்து யூனியனில் உதவி வேளாண்மை இயக்குனர் சந்திரஹாசன் தலைமையில் வடமழை மணக்காடு, மூலக்கரை, பிராந்தியங்கரை, அண்டகத்துறை, கரியாப்பட்டணம், ஆயக்காரன்புலம், கருப்பம்புலம், தேத்தாக்குடி உள்ளிட்ட 36 பஞ்சாயத்துகளில் எலி ஒழிப்பு முகாம்கள் நடத்தப்பட்டது. அரிசி குருணை, நாட்டுச்சர்க்கரை, தேங்காய் எண்ணை மற்றும் எலி மருந்து ஆகியவற்றின் கலவை கொண்ட ஐந்தாயிரம் பொட்டலங்கள் பஞ்சாயத்துதோறும் வழங்கப்பட்டது.இதைத்தொடர்ந்து இதுகுறித்து வேளாண்மைத்துறை அலுவலர்கள் வேதரத்தினம், ரவி, சுப்பிரமணியன், கந்தவேல், ஆத்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் அருள் பிரகாசம் மற்றும் வேளாண்மைத்துறையினர் செயல்விளக்கம் அளித்தனர். இதில், விவசாயிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## மழையின்றி கண்மாய்கள் வறண்டன: விவசாயிகள் பாதிப்பு

பதிவு செய்த நாள் : மே 29,2012,00:13 IST

வருஷநாடு: கடமலை-மயிலை ஒன்றியத்தில் இந்தாண்டு போதிய மழை இல்லாததால் கண்மாய்கள் வறண்டுள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கடமலை-மயிலை ஒன்றியத்தில் செங்குளம், ஓட்டனை, அம்மாகுளம், பஞ்சந்தாங்கி உட்பட பல

கண்மாய்கள் உள்ளன. இக்கண்மாயினை நம்பி நூற்றுக்கணக்கான விவசாயிகள் தக்காளி, பீன்ஸ், கத்தரி மக்காச்சோளம்,போன்ற விவசாயம் சாகுபடி செய்து வந்தனர். இந்தாண்டு மூல வைகையின் உற்பத்தி இடமான வெள்ளி மலை, அரசரடி,நொச்சிஓடை, காந்திக்கிராமம், முத்துநகர், வாலிப்பாறை ஆகிய பகுதிகளில் கடந்த ஆண்டினை விட இந்தாண்டு மழை இல்லை. இதனால் வைகை ஆற்றில் வெள்ளம் ஏற்படவில்லை. பெரும்பாலும் சாரல் மழை பெய்து வருவதால் கண்மாய்கள் நிரம்பவில்லை. இதே நிலைமை நீடித்தால் கடமலை-மயிலை ஒன்றியத்தில் உள்ள விவசாயிகளின் கிணறுகளில் நீர் மட்டம் குறைந்து விடும். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். தற்போது கோடை காலங்களில் பொதுமக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. பெரும்பாலான கண்மாய்கள் தனி நபர் ஆக்கிரமிப்பில் உள்ளது. ஆக்கிரமிப்பினை அகற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் திறப்பது எப்போது**

பதிவு செய்த நாள் : மே 29,2012,00:16 IST

கம்பம்: கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக சாகுபடிக்கு பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறப்பது தாமதமாகும் நிலை எழுந்துள்ளது.
பருவமழை துவங்காததாலும், அணையின் நீர் மட்டம் 112 அடிக்கு குறைவாக இருப்பதாலும், தண்ணீர் திறக்க முடியாது என்று பொதுப்பணித்துறை தெரிவித்துள்ளது.கம்பம் பள்ளத்தாக்கில் கூடலூர் முதல் பழனிசெட்டிபட்டி வரை 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பில் இருபோக நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

முதல் போகத்திற்கு ஜூன் முதல் தேதியில் நாற்றுகள் வளர்க்க தண்ணீர் திறப்பது வழக்கமாகும். ஆனால் கடந்த சில ஆண்டுகளாகவே ஜூன் முதல் தேதியில் தண்ணீர் திறக்க முடிவதில்லை.

கடந்த ஆண்டு முதல் போகத்திற்கு ஜூன் 18 ல் தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் நீர்மட்டம் 112 அடியாக இருந்தால் மட்டுமே, தண்ணீர் திறக்க முடியும். ஆனால் தற்போது அணையின் நீர் மட்டம் 111.3 அடியாக உள்ளது. அணைக்கு நீர் வரத்து இல்லை. அணைப்பகுதியில் பருவமழை துவங்கவில்லை. இந்நிலையில் குடிநீருக்கென 120 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் தமிழ்செல்வன் கூறுகையில், " பருவமழை துவங்குவது தாமதமாகிறது. அணையின் நீர் மட்டம் 112 அடியாக இருந்தால் தான் அரசிற்கு பரிந்துரை செய்ய முடியும். ஆனால் தற்போது 111.3 அடியாக இருப்பதால், தண்ணீர் திறக்க

வாய்ப்பில்லை,' என்றார். அணையின் நீர் மட்டம் குறைந்து வருவதாலும், பருவமழை ஆரம்பமாகாமல் இருப்பதாலும், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

## காய்கறி பதனிடும் மையம் செய்படுவதில் தாமதம்

பதிவு செய்த நாள் : மே 29,2012,00:16 IST

கருத்தை பதிவு செய்ய

மூணாறு: மூணாறில் தோட்டக்கலை துறை சார்பில் ரூ,ஒரு கோடி செலவில் கட்டப்பட்ட காய்கறி பதனிடும் மையம், அதிகாரிகளின் அலட்சியத்தால் செயல்படாமல் முடங்கி கிடக்கிறது.

தேவிகுளம் தாலுகாவில் மூணாறு அருகில் உள்ள வட்டவடை,காந்தலூர் போன்ற பகுதிகளில் குளிர்காலத்தில் பயிரிடப்படும் காய்கறிகள் 40 சதவிகிதம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம் விவசாயிகளுக்கு எவ்வித பலனும் இல்லை. இங்கு உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளை விவசாயிகள் நேரடியாக விற்பனை செய்ய வசதியில்லாததால், ஏஜென்ட் மூலம் மார்க்கெட்டுகளுக்கு செல்கிறது.

இதனால்விவசாயிகளுக்கு போதிய வருமானம் கிடைப்பதில்லை. வட்டவடையில் காரட், பீன்ஸ், பட்டர் பீன்ஸ், பட்டாணி, முட்டைகோஸ் போன்றவைகள் கூடுதலாக பயிரிடப்பட்டு வருகிறது. இங்கு விவசாயிகளிடம், ஏஜென்ட்கள் மூலம் ரூ.16 க்கு வாங்கும் காரட் (ஒரு கிலோ), 43 கி.மீ., தொலைவில் உள்ள மூணாறில் ரூ.40 க்கு விற்கப்படுகிறது. உருளைக்கிழங்கு ரூ.14க்கு வாங்கி, ரூ,24க்கும், முட்டைகோஸ் ரூ.5.50க்கு வாங்கி, ரூ.40க்கும், பட்டர் பீன்ஸ் ரூ.40க்கு வாங்கி,ரூ,110க்கும், பட்டாணி ரூ.30க்கு வாங்கி,ரூ,120க்கும் விற்கப்படுகிறது.

தோட்டக்கலை துறையினர் 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை விவசாயத்திற்கு பல்வேறு உதவிகளை செய்து, விவசாயிகளிடம் இருந்து விளை பொருட்களை நேரடியாக கொள் முதல் செய்து வந்தனர்.இதனால் விளை பொருட்களுக்கு சரியான விலை கிடைத்து வந்தது.விளை பொருட்களை சேகரித்து, வெளி மாநிலங்களுக்கு சப்ளை செய்வதற்கு வசதியாக மூணாறில் தோட்டக்கலை துறை சார்பில் ரூ.ஒரு கோடி செலவில் பதனிடும் மையம் கட்டப்பட்டது.

ஒரு ஆண்டு மட்டும் செயல்பட்ட நிலையில் அதிகாரிகளின் அலட்சியத்தால் மையம் செயல்படாமல் பல ஆண்டுகளாக முடங்கி கிடக்கிறது. விவசாயிகளிடம் நேரடி கொள் முதலும் நிறுத்தப்பட்டது. விவசாயத்தையும்,விவசாயிகளையும் பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தோட்டக்கலை துறையினர் முன்வர வேண்டும்.

## மானியத்தில் சொட்டுநீர் பாசனம் ஆர்வம் காட்டாத விவசாயிகள்

பதிவு செய்த நாள் : மே 28,2012,23:40 IST

திண்டுக்கல்: மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்துக் கொடுக்க அரசு தயாராக இருந்தும், விவசாயிகள் விண்ணப்பிக்க தயங்குகின்றனர்.

வேளாண் துறை அதிகாரிகளால், அனைத்து மாவட்டங்களிலும் உழவர் விழா, கடந்த மாதம் நடந்தது. முதல்வரின் சிறப்பு திட்டம் என்பதால் உயர் அதிகாரிகள் அதிக அக்கறை செலுத்தினர். களப்பணிக்கு செல்லாமல் அலுவலகத்தில் இருந்தவாறு அறிக்கை வெளியிட்டு வந்த அதிகாரிகளுக்கு, இந்த உழவர் விழா பல்வேறு அனுபவங்களை கற்றுக் கொடுத்துள்ளது.பெரும்பாலான கிராமங்களில் விவசாயிகள், உழவர் விழாவில் பங்கேற்கவில்லை.

ஊராட்சி தலைவர்களின் முயற்சியால் கூட்டத்திற்கு ஆள் சேர்க்கப்பட்டது. கூலி வேலைக்கு ஆள் இல்லாததால் விளைந்த பயிர்கள் முற்றிய நிலையில், செயல்முறை விளக்கத்தை கூட நடத்த முடியாமல் அதிகாரிகள் திணறினர்.நிலங்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வந்துள்ளது. ஆனால் இதை பயன்படுத்த விவசாயிகள் ஆர்வம் இன்றி உள்ளனர்.

இந்நிலை நீடித்தால் உணவு பஞ்சத்தை தவிர்க்க முடியாது என்று அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.இதுகுறித்து வேளாண் அதிகாரிகள் கூறியதாவது: "அருமையான திட்டத்தை அரசு அறிவித்தும் விவசாயிகள் அதில் அக்கறை காட்டவில்லை. ஒரு ஏக்கரில் இருந்து 5 ஏக்கர் வரை உள்ள நிலங்களுக்கு, ரூ.43 ஆயிரம் மதிப்பில் சொட்டு நீர் பாசனம் அமைத்துக் கொடுக்க, 25 நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை விண்ணப்பங்கள் வரவில்லை. விரல் விட்டு எண்ணும் அளவில் அதுவும் பண்ணையாளர்களின் தூண்டுதலில், அவர்களின் பினாமிகள் தான் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர். சிறு, குறு விவசாயிகள் தங்கள் தொழிலை கைவிட்டுள்ளனர் என்பதை உழவர் விழாவில் உணர்ந்து கொள்ள முடிந்தது. விவசாயிகள் அக்கறை செலுத்தினால் மட்டுமே விளை நிலங்களை காப்பாற்ற முடியும்' என்றார்.

---

தினகரன்

டீத்தூள் விலை கிலோ ரூ5 உயர்வு

பதிவு செய்த நேரம்:2012-05-28 10:43:52

குன்னூர்: நீலகிரி மாவட்டத்தில் பெரும்பான்மை தேயிலைத்தூள் குன்னூரில் உள்ள அரசு மற்றும் தனியார் ஏல நிறுவனங்கள் மூலம் விற்கப்படுகிறது. கடந்த சில மாதங்களாக ஏல மையங்களில் தேயிலைத்தூள் விலை சரிந்து வந்த நிலையில் தேயிலைத்தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்தது. இதை தொடர்ந்து தேயிலை வாரியம் சார்பில் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏல மைய புரோக்கர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அதில், 'ஒரு கிலோ தேயிலைத்தூளை ரூ.70க்கு குறைவாக தொடர்ந்து விற்பனை செய்யக்கூடாது, இதுபோன்ற விற்பனை தொடரும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட உற்பத்தியாளர்கள் மற்றும் புரோக்கர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு தொழிற்சாலையிலும் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத் தூளின் அளவு உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் மாதந்தோறும் ஆன்லைன் மூலம் தேயிலை வாரியத்தில் பதிவு செய்ய வேண்டும்' என்று கூறப்பட்டிருந்தது.

அதைத்தொடர்ந்து நடைபெற்ற ஏலங்களில் 100 சதவீத விற்பனையுடன் அனைத்து ரகத்திற்கும் கிலோ ரூ.3 முதல் ரூ.5வரை விலை உயர்ந்துள்ளது. இதனால் பசுந்தேயிலை விலையும் உயரத் துவங்கி உள்ளது.

போதிய மகசூல் இன்றி வரத்து குறைவு காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

700 கிலோ

ரேஷன் அரிசி பறிமுதல்

கூடலூர்: கூடலூரில் இருந்து கர்நாடகா மாநிலத்திற்கு செல்லும் அரசு பேருந்துகளில் ரேஷன் அரிசி கடத்தப்படுவது தொடர்பாக கூடலூர் வட்ட வழங்கல் துறையினர் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். கடந்த 2 நாட்களாக கூடலூர் பேருந்து நிலையம், தெப்பக்காடு பகுதியில் வட்ட வழங்கல் அலுவலர் ராஜேந்திரன் தலைமையில் உதவியாளர்கள் கிருஷ்ண மூர்த்தி, மோசஸ், வெங்கடாசலம் ஆகியோர் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கூடலூர் பேருந்து நிலைய பகுதியிலும், தெப்பக்காடு பேருந்து நிறுத்தத்தில் இருந்தும் 10க்கும் மேற்பட்ட பைகளில் 700 கிலோ ரேஷன் அரிசி வாகனங்களில் எடுத்து செல்ல வைக்கப்பட்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு யாரும் உரிமை கோரவில்லை. எனவே அரிசி பறிமுதல் செய்யப்பட்டு பொது வினியோக கிடங்கில் ஒப்படைக்கப்பட்டது

## 3 லட்சம் மல்பெரி கன்றுகள் விரைவில் நடவு செய்ய திட்டம்

பதிவு செய்த நேரம்:2012-05-28 10:42:35

குன்னூர்: நீலகிரி மாவட்டம் மாயார் அருகேயுள்ள பூதநத்தம் கிராமத்தில் பட்டு வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. சேலம் பட்டு வளர்ச்சி துறை இயக்குனர் பிரபாகரன் தலைமை வகித்து பேசியதாவது: சட்டமன்ற கூட்ட தொடரில் பட்டு வளர்ச்சி துறையை மேம்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதற்கான நடவடிக்கையும் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. கடந்தாண்டு மல்பெரி நடவு செய்ய ஊக்க தொகை ஏக்கருக்கு ரூ.4125 வரை வழங்கப்பட்ட து.இந்தாண்டு இது ரூ.6750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் 5ஆயிரம் ஏக்கருக்கு 33 ஆயிரத்து 750 லட்சம் ரூபாய் மல்பெரி நடவு ஊக்க தொகையாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது. பட்டுப்புழு வளர்ப்பு தளவாடங்கள் கொள்முதல் செய்ய ரூ.3750 வழங்கப்படும். 3 லட்சம் மல்பெரி கன்றுகள் விரைவில் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக முதல்கட்டமாக அரசு சார்பில் ரூ.26.25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தரமான இலை உற்பத்திக்கு விலையில்லா நுண்ணுட்ட சத்து வழங்க ரூ.40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பட்டு விவசாயிகள் புழு வளர்ப்பு மனை, பயிர் காப்பீடு, தனி நபர் காப்பீடு தொகையில் மாநில அரசின் பங்கு 25 சதவீதத்தில் இருந்து 40 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. பயனாளிகள் பங்கு தொகை 25 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசன வசதி ஏற்படுத்தி கொள்ள நூறு சதவீத மானிய உதவி வழங்கப்படும். அரசின் இந்த நல திட்ட மானிய உதவிகளை பெற்று பட்டு வளர்ப்பு தொழிலை மேற்கொள்ளும் விவசாயிகள் ஆண்டுக்கு ரூ.1 லட்சம் வரை வருவாய் ஈட்டலாம். இவ்வாறு பிரபாகரன் பேசினார்.

பின்னர் விளைநிலங்களில் மல்பெரி மரக்கன்றுகளை நடவு செய்தார். நிகழ்ச்சியில் மசினகுடி பட்டு பண்ணை ஆய்வாளர் ராஜ மாணிக்கம் வரவேற்றார். உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள மொய்தீன், சந்திரன், நசீர், முருகன் ஆகியோர் வாத்தி பேசினார். குன்னூர் பட்டு வளர்ப்பு துறை ஆய்வாளர் சிவண்ணா, வெங்கடேசன், முன்னோடி விவசாயிகள் லிங்கா கவுடர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

குன்னூர் பட்டு வளர்ச்சி துறை உதவி ஆய்வாளர் லிங்கராஜ் நன்றி கூறினார்.

## மகசூல் குறைந்ததால் பசுந்தேயிலை விலை உயர்ந்தது

பதிவு செய்த நேரம்:2012-05-28 10:41:55

குன்னூர்: நீலகிரி மாவட்டத்தில் இந்தாண்டு உறைபனி, வெயில், ஆலங்கட்டி மழை, உள்ளிட்டவற்றால் தேயிலை மகசூல் தொடர்ந்து பாதிப்படைந்துள்ளது. இதனால் எதிர்பார்த்தவாறு மகசூல் கிடைக்கவில்லை.

எனவே சிறு தேயிலை விவசாயிகள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். தொழிற்சாலைகளுக்கு பசுந்தேயிலை வரத்து குறைவாக இருப்பதால் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக ஏல மையங்களுக்கு வரும் தேயிலை தூளின் அளவு குறைந்து வருகிறது. தேவை அதிகரிக்கும் கூட போதிய அளவு தேயிலை தூள் கிடைக்காததால் வர்த்தகர்கள் ஏலத்திற்கு வரும் குறைந்த அளவிலான தூளை போட்டி போட்டு கொண்டு வாங்குகின்றனர். இதனால் தேயிலை தூளின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகி றது.

இதுபோன்ற காரணங்களால் உற்பத்தியாளர்கள் தேயிலை விவசாயிகளுக்கு வழங்கப்படும் பசுந்தேயிலைக்கு உரிய விலையையும் உயர்த்தி வருகின்றனர். கடந்த 3 வாரங்களாகவே பசுந்தேயிலைக்கு உரிய விலை தொட ர்ந்து உயர்ந்து வருகிறது. இந்த வாரம் சாதாரண ரக பசுந்தேயிலை கிலோ ரூ.15, நடுத்தரம் கிலோ ரூ.20, உயர் ரகம் ரூ.25 என விலை வழங்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுக்கு முன் சாதாரண ரக பசுந்தேயிலை கிலோ ரூ.20 வரை வழங்கப்பட்டது.

அதன் பின் விலை வீழ்ச்சி அடைந்தது. தற்போது தான் சற்று விலை உயர்ந்துள்ளது. 12 ஆண்டுக்கு பின் உயர் ரக பசுந்தேயிலை விலை கிலோ ரூ.25 ஆக உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மழை அளவு குறைந்த நிலையில் தேயிலை மகசூல் அதிகரிக்க மேலும் சில வாரங்கள் பிடிக்கும் என்பதால் வரும் நாட்களிலும் பசுந்தேயிலைக்கு உரிய விலை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நீர்பிடிப்பு பகுதியை அதிகரிக்க ஏரிகளைஆழப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் செந்துறை விவசாயிகள் மாநாட்டில் கோரிக்கை

பதிவு செய்த நேரம்:2012-05-28 10:47:07

அரியலூர்: ஏரிகளை ஆழப்படுத்தி நீர்பிடிப்பு பகுதியை அதிகப்படுத்த வேண்டுமென்று கரும்பு உற் பத்தியாளர் சங்கம் சார் பில் செந்துறையில் நடந்த விவசாயிகள் குடிகள் மாநா ட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

செந்துறை தாலுகாவில் விவசாயிகள் குடிகள் மாநாடு நடைபெற்றது. உடையார்பாளையம் ஆர் டிஓ இளங்கோவன் தலைமை வகித்தார். கரும்பு உற்பத்தியாளர் சங்கம் சார் பில் ஏரிகளை ஆழப்படுத்தி நீர்பிடிப்பு பகுதியை அதிகப்படுத்த வேண்டுமென் றும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் சார்பில் விவ சாய விளை பொருட்களு க்கு சரியான விலை கிடை க்க ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கவேண்டும் என்றும் கோரி க்கை மனு கொடுக்கப்பட் டது. செந்துறை

தாலுகா வில் 3 நாட்கள் நடந்த ஜமா பந்தியில் பட்டா மாற் றம் கேட்டு 709, உட்பிரிவு கேட்டு 32, பல்வேறு உதவித்தொகை கேட்டு 13ம், பிற மனுக்கள் 3 உள்பட மொத்தம் 757 மனுக்கள் பெறப்பட்டன. இதில் 482 மனுக்கள்மீது உடன் தீர்வு வழங்கப்பட்டது. கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) முனுசாமி, அரிய லூர் ஆர்டிஓ.ஜேம்ஸ் செல் லையா, உதவி இயக்குநர் (நிலஅளவை) விஜயகுமார், அலுவலக மேலாளர் (பொது) கோவிந்தராஜுலு, தாசில்தார்கள் முத்துவடி வேலு, முகுந்தன், ஆர்ஐக் கள், விஏஓக்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர் கள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

அரியலூர் தாலுகா கீழப்பழூர் உள்வட்டத்திற்குட்பட்ட கிராமங்களுக்கு நடந்த ஜமாபந்தியில் 572 மனுக்கள் பெறப்பட்டன. உடையார்பாளையம் தாலுகா தா.பழூர் உள்வட்டத்தில் 419 மனுக்களும், செந்துறை தாலுகா மாத் தூர் உள்வட்டத்தில் 262 மனுக்களும் பெறப்பட்டன. அரியலூர் மாவட்டத்தில் 3 தாலுகாவில் நடந்த ஜமாபந்தியில் கடந்த 24ம் தேதி மட்டும் 1,253 மனுக்கள் பெறப்பட்டன. எனவே அனைத்து தாலுகா அலுவலகத்தில் நாள்தோறும் நடைபெறும் ஜமாபந்தியில் பொதுமக்கள் கலந்துகொண்டு பயனடையவேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.